
| | |
|---|---|
| தனிப் பிரதி | ரூ. 10/– |
| ஆண்டுச் சந்தா | ரூ. 100/– |
| ஆயுள் சந்தா | ரூ. 1000/– |


Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 12 இதழ் : 3 ஜனவரி – 2016

## செய்திமலர்






2016-ல்

# கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.

சங்கீதம் 128:5

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



## உங்கள் சகோதரனிடமிருந்து...

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்கள் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

இந்த 2016ம் புதிய ஆண்டில் தேவன் தந்த வாக்குத்தத்தமாகிய **“கர்த்தர் சீயோனிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்.”** சங். 128:5 என்றவாக்கின்படி நம் யாவரையும் பரலோகத்தின் தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்த புதிய ஆண்டில் தேவனை தேடுகிற, நேசிக்கிற, அவருக்காக சாட்சியாய் வாழும் தேவ ஜனங்களுக்கு தேவன் பலத்த அரணாக, ஆசீர்வாதமாக கிருபைகளை கட்டளையிடுவார்.

கிறிஸ்துவின் வருகை மிக சமீபம்; அநேக வருகைக்கான அடையாளங்களை மேலே வானத்திலும், கீழே பூமியிலும் காண்கிறோம். 2016ம் ஆண்டில் நம்மை பரிசுத்த வாழ்வுக்காக அர்ப்பணிப்போம். ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும். மத். 24:14 என்ற இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம்.

2016ம் ஆண்டு ஷாலோம் ஊழியத்தில் பீல் மக்கள் மத்தியில் வெள்ளி விழா ஆண்டாகும். 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 கிராம சபைகள், 1 இலட்ச பீல் குடும்பங்களை தேவனண்டை நடத்த எங்கள் குடும்பத்தையும், தேவன் தந்த ஊழியங்களையும் அர்ப்பணித்துள்ளோம். தொடர்ந்து இவ்வருடமும் ஊழியங்களுக்காக ஜெபித்து தாங்குங்கள். உங்கள் யாவருக்காகவும் நாங்கள் ஜெபித்து வருகிறோம்.

எங்களுடன் டைட்டஸ், மெர்லின் அன்பு பேரன் Zion, இளைய மகன் ஷாலோம் மற்றும் ரஷ்யாவில் மருத்துவப் படிப்பில் இறுதியாண்டில் பயிலும் மகள் ஷெக்கினா உங்கள் யாவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்குகிறார்கள்.


“மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும், என் கிருபை உன்னைவிட்டு விலகாமலும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலும் இருக்கும் என்று, உன் மேல் மனதுருகுகிறகர்த்தர் சொல்லுகிறார்.” ஏசாயா 54:10 – என்ற வசனத்தின்படி தேவன் தாமே நம் அனைவரையும் புதிய 2016ம் ஆண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து போஷித்து வழிநடத்துவாராக!

*We Wish you all a Happy & Prosperous New Year - 2016*

தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : **09377445468** (குஜராத்)



# சீயோனிலிருந்து கர்த்தர் தரும் ஆசீர்வாதங்கள்...

சிறப்புச் செய்தி : பேராயர். **வே. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, உங்கள் யாவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பிலும் ஷாலோம் ஊழியங்கள் மற்றும் ஷாலோம் திருமண்டலத்தின் சார்பிலும் எங்கள் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம். இந்த புதிய 2016ம் ஆண்டில் தேவன் தந்த வாக்குத்தத்தமான **"கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்"** சங். 128:5 வசனத்தின்படி தேவன் உங்கள் குடும்பத்தையும், உங்கள் கையின் பிரயாசங்களையும், ஊழியங்களையும் ஆசீர்வதிப்பாராக.

வேதத்தில் நூற்றுக்கும் அதிகமான இடங்களில் **"சீயோனை"** பற்றி எழுதப்பட்டுள்ளது. கர்த்தர் **சீயோனிலே** வாசமாயிருக்கிறார் (யோவேல் 3:21) **சீயோனிலே** வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள். சங். 9:11 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தர் **சீயோனிலிருந்து** உன்னை ஆசீர்வதிப்பாராக. சங். 134:3 கர்த்தர் சீயோனை தமக்காக தெரிந்து கொண்டார். "நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன்". (யாத். 20:24)ன்படி தேவ ஜனங்கள் தேவனுக்காக பிரத்தியேகமாக தெரிந்து கொண்ட எந்த இடத்திலும் ஆசீர்வதிக்கிற தேவனாக இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டில் தாவீது எபூசியர் மேல் யுத்தம் பண்ண எருசலேமுக்கு போய் **சீயோன்** கோட்டையை பிடித்தான். பிற்பாடு அது தாவீதின் நகரமாயிற்று (2 சாமுவேல் 5:6,7) துவக்கத்தில் சீயோன் எருசலேம் பட்டணத்திலுள்ள நாலு குன்றுகளில் ஒன்று. தேவாலயம் கட்டப்பட்டபின் எருசலேம் **சீயோன்** என்று சொல்லப்பட்டது. (சங்கீதம் 128:5)

வேதத்தில் சில இடங்களில் தேவன் தம் ஜனமாகிய எருசலேம் ஜனங்களையும் இஸ்ரவேலரையும் **"சீயோன்"** என்று அழைக்கிறார். **"சீயோன் குமாரரே,** உங்கள் தேவனாகிய கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள்; அவர் தக்கபடி உங்களுக்கு முன்மாரியைக் கொடுத்து, உங்களுக்கு முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கனவே வருஷிக்கப் பண்ணுவார்". (யோவேல் 2:23) **"சீயோன்** என்னும் சுவிசேஷகியே, நீ உயர்ந்த பர்வதத்தில் ஏறு; எருசலேம் என்னும் சுவிசேஷகியே, நீ உரத்த சத்தமிட்டுக் கூப்பிடு, பயப்படாமல் சத்தமிட்டு, யூதா பட்டணங்களை நோக்கி: இதோ, உங்கள் தேவன் என்று கூறு". (ஏசாயா 40:9) "நான் வானத்தை நிலைப்படுத்தி, பூமியை அஸ்திபாரப்படுத்தி, **சீயோனை நோக்கி :** நீ என் ஜனமென்று சொல்வதற்காக, நான் என் வார்த்தையை உன் வாயிலே அருளி, என் கரத்தின் நிழலினால் உன்னை மறைக்கிறேன்". (ஏசாயா 51:16)

கர்த்தர் **சீயோனிலிருந்து** எப்படியெல்லாம் ஆசீர்வதிக்கிறார் என்பதை காணும்போது எவ்வளவோ நன்மைகளை, ஆசீர்வாதங்களை கொடுக்கிறார். அவற்றில் சிலவற்றை நாம் தியானிப்போம்.

## சிறையிருப்பை திருப்பும் கர்த்தர்

சங். 126:1 வாசித்துப் பாருங்கள் **சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது, சொப்பனம் காண்கிறவர்கள்போல் இருந்தோம்.** தேவ ஜனமாகிய இஸ்ரவேலர் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து தேவனை விட்டு விலகியதின் நிமித்தமாக அடிமைகளாக சிறையிருப்பில் வாழ்ந்தார்கள். தேவனோ இரக்கம் கொண்டு, தேவ ஜனங்கள் மீதான அன்பின் நிமித்தம் கர்த்தர் சீயோனின் சிறையிருப்பை திருப்புகிறார்.

இந்த புதிய ஆண்டிலும் தேவன் நம்முடைய வாழ்விலும் ஊழியத்திலும், குடும்பத்திலும் நீண்ட காலமாக இருக்கும் சிறையிருப்பின் கட்டுகளை அறுத்து திருப்புவார். ஆவிக்குரிய வாழ்வில் முன்னேற முடியாத பாவக்கட்டுகள்; வாழ்வில் முன்னேற முடியாத பிரச்சனைகள்; ஆசீர்வாத தடைகள், சந்ததியின் மேல் உள்ள சிறையிருப்பு என எதுவாக இருந்தாலும் கர்த்தர் சீயோனின் சிறையிருப்பை திருப்புகிறவராக இருக்கிறார். ஊழியத்தின் மேல் வளர்ச்சிக்கும், தரிசனத்திற்கும் தடையாய் இருக்கிற சிறையிருப்பை கர்த்தர் திருப்புகிறார். காயங்களை கட்டி ஆறுதலை தருகிற தேவன். இமைப்பொழுது கைவிட்டாலும் அநாதி சிநேகத்தினால் நம்மை அரவணைக்கும் தேவன். இவைகளெல்லாம் நடக்கும் ஆனாலும் நாம் சொப்பனம் காண்கிறவர்களை போல இருப்போம். **“என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை”** யோவேல் 2:26 என்று தேவன் சொல்கிறார். நம்முடைய இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்து ஊழியம் செய்த போது தம் அன்பின் கரங்களால் 12 வருடங்கள், 18 வருடங்கள், 38 வருடங்கள், பாவங்கள், சாபங்கள், நோய்களில் இருந்தவர்களை அன்பாக, மனதுருக்கத்துடன் சிறையிருப்பிலிருந்து விடுவித்து அவர்கள் வாழ்க்கையை திருப்பினார். இன்றும் நம் இயேசு நம் சிறையிருப்பை திருப்பும்படியாக உங்கள் மத்தியில் வந்திருக்கிறார். வருடத்தின் முதல் நாளிலே இயேசுவே என்று கூப்பிடுவோம். மறு உத்திரவு தந்து நம்மை மீட்டு ஆசீர்வதிப்பார்.

மேலும் தேவன் **சீயோனிலிருந்து** தரும் ஆசீர்வாதங்களில் உன்னதமான ஆசீர்வாதங்களை எரேமியா 31: 12 – 14 வரை காணலாம்.

**முதலாவது அன்றாட சரீர தேவைகளான ஆசீர்வாதங்கள் :** அவர்கள் வந்து, சீயோனின் உச்சியிலே கெம்பீரித்து, கர்த்தர் அருளும் கோதுமை, திராட்சரசம், எண்ணெய், ஆட்டுக்குட்டிகள், கன்றுக்குட்டிகள் என்பவைகளாகிய இந்த நன்மைகளுக்காக ஓடிவருவார்கள்; எரேமியா 31 : 12 (a)

**இரண்டாவதாக ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் :** “அவர்களுடைய ஆத்துமா நீர்பாய்ச்சலான தோட்டம் போலிருக்கும்; அவர்கள் இனித் தொய்ந்து போவதில்லை” மட்டுமன்றி ஏசாயா 2:3 ன்படி ஆவிக்குரிய பெலனையும் ஆசீர்வாதங்களையும் தேவன் தருகிறார்.

**மூன்றாவதாக துக்கங்களை மாற்றி சந்தோஷத்தைத் தரும் ஆசீர்வாதங்கள் :** "அப்பொழுது கன்னிகைகளும், வாலிபரும், முதியோருங்கூட ஆனந்தக்களிப்பாய் மகிழுவார்கள்; நான் அவர்கள் துக்கத்தைச் சந்தோஷமாக மாற்றி, அவர்களைத் தேற்றி, அவர்கள் சஞ்சலம் நீங்க அவர்களைச் சந்தோஷப்படுத்துவேன்". எரேமியா 31:13

**நான்காவதாக ஊழியர்களுக்காக விசேஷித்த ஆசீர்வாதங்கள் :** "ஆசாரியர்களின் ஆத்துமாவைக் கொழுமையானவைகளினால் பூரிப்பாக்குவேன்;"எரேமியா 31:14 (a)

**ஐந்தாவதாக என் ஜனங்கள் நான் அளிக்கும் நன்மையினால் திருப்தியாவர்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**


இந்த ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்? வேதம் சொல்கிறது நாம் **சீயோன்** உச்சியில் ஓடி வர வேண்டும். கெம்பீரித்து பாடி மகிழ்ந்து அவரை ஆராதிக்க வேண்டும். **"அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள்; அவர்களை வழி நடத்துவேன்; அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கு இடறாத செம்மையான வழியிலே நடக்கப் பண்ணுவேன்; என்று தேவன் சொல்கிறார்".** (எரேமியா 31:9) **"எழுந்திருங்கள், சீயோனில் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்திற்குப் போவோம் வாருங்கள்"** எரேமியா 31:6– வசனத்தின்படி கர்த்தரிடத்தில் வந்து கிருபைகளை பெற்றுக் கொள்வோம்.

கடைசியாக புதிய ஏற்பாட்டில் "நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும். ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும்" (எபிரேயர் 12:22). "பின்பு நான் பார்த்தபோது, இதோ, **சீயோன் மலையின் மேல்** ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக் கண்டேன்". வெளி. 14:1

தேவ ஜனங்களாகிய நம்மை தேவன் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி மீட்டு, மணவாட்டியாகிய சபையாக அழைத்துள்ளார். பரம எருசலேம், **சீயோன்** என்று அழைக்கப்படும் மணவாட்டியாகிய சபையை மணவாளன் இயேசு கரம் பிடித்து அழைத்துச் செல்ல வருகிறார். அவரோடு கூட நித்தியகாலமாக **சீயோனில்** வாசம் பண்ண நாம் ஆயத்தமாக இருக்கிறோமா? அந்த மேலான ஆசீர்வாதத்தை தேவன் **சீயோனிலிருந்து** நமக்கும் நம் சந்ததிக்கும் தருகிறார்.

**"கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்; நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்"** –சங். 128 : 5 என்ற வசனத்தின்படி **2016ம் ஆண்டு முழுவதும் தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!** ஆமென்!!

# *சென்னை மற்றும் அண்டை மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு*



### *விசேஷித்த ஜெபமும், ஆதரவும்*

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,** கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், புதுச்சேரி மற்றும் தூத்துக்குடி வட்டாரங்களில் பெய்த கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் உலகத்தையே பிரமிக்க வைத்து அனைவரின் கண்களில் கண்ணீர் வர வைத்தது. குறிப்பாக சென்னையில் 100 வருடங்களுக்கு முன் பெய்த மழையைக் காட்டிலும் அதிக அளவிற்கு பெய்து மிகப் பெரிய வேதனையை தந்துள்ளது.

தேவன் சென்னை வட்டார பகுதிகளை குறிப்பாக தமிழகத்தை அதிகம் நேசிக்கிறார். தம் அப்போஸ்தலர் தோமாவையே நற்செய்தி கூற அனுப்பி வைத்தார். முதல் பிராட்டஸ்டண்ட் மிஷனெரி சீகன்பால்க் ஐயரை தரங்கம்பாடிக்கு அனுப்பி வைத்தார். பாரத தேசத்தில் முதலில் மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமம் தமிழ் வேதாகமம். அநேக மிஷனெரிமார்களால் தமிழகம் முழுவதும் திருச்சபைகள், கல்வி, சுகாதாரம், முன்னேற்றங்கள் கிடைக்கப் பெற்றது. தேவன் தமிழகத்தை ஆசீர்வதித்துள்ளார்.

ஆனால் வெள்ளப்பெருக்கு, சுனாமி இவைகள் நடந்தது என்பதை கேட்பதை விட நம்மை ஆராய்ந்து பார்க்கவும், வேதவசனங்கள் நிறைவை நினைவு கொள்ளவும், வருகைக்கு ஆயத்தமாக தேவன் நம்மை உருவாக்கினார். தமிழகத்தில் வட இந்திய மிஷனெரி பணிகளையும், மிஷனெரிமார்களை அனுப்பி, தாங்கி, ஆயிரமாயிர கிராமங்கள் இரட்சிக்கப்பட தேவன் பயன்படுத்தியதை மறக்க அல்லது மறுக்க முடியாது. குறிப்பாக பீல் ஆதிவாசி விசுவாசிகள் சபைகளை மறக்க முடியாது.

கிராமங்களில் வாழும் நம் பீல் சுதேச ஊழியர்கள் மாத கூடுகைக்கு வந்த போது வீடியோ காட்சிகளை கண்டு கண்ணீர் சிந்தி தங்கள் துக்கத்தைப் பகிர்ந்துக் கொண்டு தங்கள் சபைகள் மூலம் பாரத்துடன் ஜெபித்தார்கள். சிறிது சிறிதாக காணிக்கை சேர்த்து **ரூ. 1 இலட்சத்திற்கும்** அதிகமான உதவி செய்ய கொடுத்தார்கள். இன்னும் தர உள்ளார்கள். தாகோத் வட்டார கிறிஸ்தவரல்லாத சிலர் உதவிகரம் நீட்டியுள்ளார்கள். ஷாலோம் பணித்தள ஊழியர்களும் தங்கள் ஜெபத்துடன் உதவிகரங்களையும் நீட்டியுள்ளனர்.

எனவே, அதிக ஜெபத்துடன் **Shalom Charity Mission** மூலமாக ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ஜனவரி முதல் வாரத்தில் கிடைத்த உதவி தொகைகளை சிறு உதவியாக கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்துக் கொள்ள திட்டமிட்டுள்ளோம். ஷாலோம் ஆதரவாளர்களுக்கு நீங்கள் உதவி செய்ய மனதில் ஏவப்பட்டால் **Shalom Charity Mission –க்கு** உடனடியாக அனுப்ப, மற்றும் ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன். நீங்கள் அனுப்பும் நிதி உதவிக்கு 80G வருமான வரி விலக்கு உண்டு என்பதை தெரிவிக்கிறோம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள என்னுடன் அல்லது தூத்துக்குடி அலுவலகத்தை தொடர்பு கொள்ளுங்கள். **கர்த்தர் தாமே நம் அனைவருக்கும் நற்கிரியைகள் செய்ய கிருபை தருவாராக!**

*“ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள்.” நெகேமியா 8:10*

# தமிழகத்தில் நடைபெற்ற இதர ஊழியங்கள்

**ஞாயிறு ஆராதனை – 22.11.2015, தூத்துக்குடி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் தூத்துக்குடி, பிரையண்ட்நகர், **C.S.I.** தூய. இம்மானுவேல் தேவாலயத்தில் கடந்த **22.11.2015** அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் ஊழியர்கள் கலந்துக் கொண்டார்கள். இதில் **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் ஆராதனை நடத்தியதோடு தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. இம்மானுவேல் வான்ஸ்றக்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 29.11.2015, நாகலாபுரம்.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் நாகலாபுரம், **C.S.I.** திவ்ய உயிர்த்தெழுதலின் ஆலயத்தில் கடந்த **29.11.2015** அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் ஊழியர்கள் கலந்துக் கொண்டார்கள். இதில் **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் பாடல் ஆராதனை நடத்தியதோடு தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. ஜெயபிரகாஷ்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. பாஸ்கர் அல்பர்ட் ராஜன்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 29.11.2015, கானார்பட்டி.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கானார்பட்டி, **C.S.I.** தூய யோவான் ஆலயத்தில் கடந்த **29.11.2015** அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. சாமுவேல்** அவர்கள் பாடல் ஆராதனை நடத்தினார்கள். **சகோ. டேவிட்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. ஏசாயா** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 29.11.2015, கன்னியாகுமரி**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கன்னியாகுமரி, **C.S.I.** கிறிஸ்து ஆலயத்தில் கடந்த **29.11.2015** அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் **சகோ. செல்வதுரை** அவர்கள் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டதோடு தேவனுடைய வார்த்தையையும் வழங்கினார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் **Rev. சாமுவேல்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## சகோ. ரஞ்சித் துரைராஜ் (சென்னை) குடும்பத்தினரின் பணித்தள வருகை

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த வருட அக்டோபர் மாதம் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிடும்படி கடந்து சென்றோம். 16–ம் தேதி இரவு பணித்தளத்தைச் சென்றடைந்தோம். 17–ம் தேதி காலை **பேராயர். தேவதாஸ்** அவர்களோடு குஜராத்திலுள்ள தெல்சர் கிராம ஆலயத்தையும் ஊழியர் குடும்பத்தையும் சந்தித்து ஜெபித்தோம். தொடர்ந்து மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா Compassion CDC Project staff மற்றும் மாணவர்களையும், சந்தித்தோம். அதன் பின் மத்தியப்பிரதேசத்திலுள்ள ராணாப்பூர் தாலுகாவில் அமைந்துள்ள பிப்பிலிப்பாடா என்ற கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படியாக கடந்து சென்றோம். சபை விசுவாசிகள் உற்சாகத்துடன் எங்களை வரவேற்றார்கள். தேவாலயத்தை ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் அநுக்கிரகம் பண்ணினார். பாடல் ஆராதனை வேளையில் கர்த்தருடைய மகிமை இறங்கியதை உணர்ந்தோம். அதைத் தொடர்ந்து நானும் எனது மனைவியும் வாழ்த்துச் செய்தி வழங்கினோம். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்து, ஜெபித்தார்கள். ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. கலந்துக் கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது.

மறுநாள் 18–ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று நாங்கள் ஆதரித்து வரும் பீல் சுதேச **ஊழியர். மன்னு மெய்டா** அவர்கள் குடும்பத்தை சந்தித்து, அவர்களுக்காக ஜெபித்தோம். மேலும் நாங்கள் ஆதரித்து வரும் 3 பீல் ஆதிவாசி மாணவர்களையும் சந்தித்து, அவர்களுக்காகவும் வெகுமதிகளையும் வழங்கி ஜெபித்தோம். அதைத் தொடர்ந்து இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பாட்லா கல்வாணி கிராம ஆலயத்தில் ஷாலோம் மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட்டது. அங்கு **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுடன் கலந்து கொள்ள சென்றோம். சபை விசுவாசிகள் உற்சாகமாக தேவனைப் பாடி ஆராதித்தார்கள். அதைத் தொடர்ந்து நானும் எனது மனைவியும் வாழ்த்துரைகளைப் பகிர்ந்து கொள்ள **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து ஷாலோம் மிஷன் ஞாயிறுக்கென்று சபை விசுவாசிகள் உதாரத்துவமான காணிக்கைகளை உற்சாகத்துடன் கொண்டு வந்து தேவனுக்கு படைத்தார்கள். ஞாயிறு ஆராதனை ஆசீர்வாதமாக இருந்தது.

எங்கள் குடும்பத்தின் சார்பில் பீல் சுதேச ஊழியரைத் தாங்கவும், 3 பீல் ஆதிவாசி மாணவர்களை தாங்கவும் குறிப்பாக மத்தியப்பிரதேசத்தில் உள்ள பிப்பிலிப்பாடா கிராம ஆலயம் கட்டி தர தேவன் கிருபை தந்தபடியால் தேவனைத் துதிக்கிறேன். பீல் மக்கள் மத்தியில் தேவன் தரும் எழுப்புதலை காணும்போது, இந்த ஷாலோம் ஊழியத்திற்கு மாதந்தோறும் ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்களை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளோம். நீங்களும் எங்களைப் போல ஏதாவது ஒரு வகையில் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்து தாங்கவும் அன்புடன் அழைக்கிறோம்.

எங்களது இரண்டு நாட்கள் பணித்தளப் பார்வை மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. **தேவனுக்கே மகிமை!**

# சகோ. ரஞ்சித் துரைராஜ் (சென்னை) குடும்பத்தாரின் பணித்தள வருகை





பிப்பிலிப்பாடா (ம.பி.) கிராம ஆலய பிரதிஷ்டையின் போது



சகோ. ரஞ்சித் அவர்களின் பகிர்வு வேளை



சகோதரி. ஹெப்சி அவர்களின் பகிர்வு வேளை



சுதேச ஊழியரின் குடும்பத்தாருக்கு அன்பளிப்புகள்



பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு அன்பளிப்புகள்



பாட்லா கர்வாணி கிராம சபையில் கூடியிருந்த தேவ ஜனங்கள்



நெல்சூர் (குஜராத்) கிராம ஆலயத்திற்கு முன்பு

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

## SHALOM CHARITY MISSION

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 23 ஆண்டுகளாக தேவன் தந்த **Sharing Love Mission** (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு "கல்வி அறிவு வளர்ச்சித் திட்டங்களை" செயல்படுத்த வேண்டும். இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஷாலோம் பள்ளிகள், ஷாலோம் விடுதிகள், கல்வி ஆதரவு சேவைகள் மூலமாக சுமார் 1200க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர். மேலும் ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை ஜூலை – 2013 – ல் ஆரம்பிக்கப்பட்டு Dr. இன்பக்குமார் ஜோசப் அவர்கள் தலைமையில் மருத்துவப் பணிகளும், இலவச மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகின்றன. CBN ஸ்தாபனத்துடன் இணைந்து பீல் மக்கள் வசிக்கும் 200க்கும் அதிகமான கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு – கை பம்புகள் அமைக்கப்பட்டு குடி நீர் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

இந்த ஷாலோம் சேரிட்டி மிஷன் பணிகளை சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் Managing Trustee ஆகவும் சகோ. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள் National Director ஆகவும் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

மேலும் ஆதிவாசி மாணவர் ஆதரவுத் தொகை, உயர்கல்வி படிப்பிற்கான ஆதரவுத் தொகை, இலக்கியப் பணிக்கான ஆதரவுத் தொகை, மருத்துவப் பணிக்கான ஆதரவுத் தொகை மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். இந்தப் பெயரில் காணிக்கை அனுப்புவோருக்கு **80G** வரிவிலக்கு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch (IFS Code : UTIB0000105)** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch (IFS Code : TMBL0000174)** |



# ஷாலோம் கிராம ஆலயம்
# டிக்கிடி
## மத்தியப்பிரதேசம்

டிக்கிடி என்ற கிராமம் மத்தியப்–பிரதேசத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தில் உள்ள ராணாப்பூர் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமைகளாகவும், விக்கிரக ஆராதனை செய்யும் பழக்கம் உடையவர்கள். இந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தவர்தான் சகோ. ராலுசிங் ஹாட்டிலா. இவர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வதற்கு முன்பதாக பலவிதமான பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார்.

இவருடைய மனைவி பிசாசின் பிடியினில் சிக்குண்டு, வியாதிப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார்கள். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்தச் சூழ்நிலையில் ஷாலோம் சுதேச ஊழியர் சகோ. நூர்ஜி சங்காடா அவர்கள் இயேசு கிறிஸ்துவைக்குறித்துக் கூறி, ஜெபித்தபோது தேவன் பரிபூரண சுகத்தை அவரது மனைவிக்குக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். தொடர்ந்து சாம்னா தாமணி சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார்கள். பின்னர் சகோ. ராலுசிங் ஹாட்டிலா அவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரத்தினை தேவன் கொடுக்கவே, தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஒரு மாத ஊழியப் பயிற்சி பெற்று, டிக்கிடி கிராமத்தில் மீண்டும் 20 பேரைக் கொண்டு கூட்டம் நடத்த ஆரம்பித்தார்.

ஆரம்ப நாட்களில் எதிர்ப்புகள் இருந்தாலும் சோர்ந்து போகாமல் உபவாசத்துடன் ஜெபித்தபோது, தேவன் சூழ்நிலைகளை மாற்றிப் போட்டார். பின்பு சபைக்கு மக்கள் அதிகமாக வர ஆரம்பித்தார்கள். 2001–ம் ஆண்டு சிறிய ஆலயம் கட்டப்பட்டு, விசுவாசிகள் ஆராதித்து வந்தார்கள். சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்களை நிகழ்த்தவே சபை வளர்ந்து பெருகியது. தற்போது இந்த ஆலயத்தில் 130 குடும்பத்தார் தேவனை ஆராதனை செய்து வருகின்றனர். ஆராதனைக்கு பெரிய ஆலயம் அவசியமாகவே, ஊழியர் சகோ. ராலுசிங் ஹாட்டிலா அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில், ஒரு அழகிய தேவாலயம் கட்டப்பட்டு, தேவ நாம மகிமைக்காக, 22–11–2015 ஞாயிறு அன்று, பேராயர். தேவதாஸ் மற்றும் சகோ. ஜெயசிங் (D.S. குடும்பம்) அவர்களும் ஜெபித்து, பிரதிஷ்டை செய்தார்கள். தேவனுக்கே மகிமை!

இந்த ஆலயம் D.S. குடும்பத்தாரின் சார்பில் (சென்னை) கொடுக்கப்பட்ட நிதி உதவியினால் கட்டப்பட்டுள்ளது.

# சென்னை சகோ. ஜெயசிங் (D.S Family) மற்றும் குடும்பத்தினரின் பணித்தள வருகை மற்றும் டிக்கிடி கிராம ஆலய பிரதிஷ்டை


கலாச்சார வரவேற்பு – டிக்கிடி, ம.பி.


டிக்கிடி, (ம.பி.) கிராம ஆலயப் பிரதிஷ்டை


டிக்கிடி (ம.பி.) கிராம ஆலயத்தில் கூடி தேவனை ஆராதிக்கும் விசுவாசிகள்


சிறப்பு ஹிந்தி பாடல்


பிஜல்பூர் (இராஜ்) ஷாலோம் பள்ளி & விடுதி மாணவர்களுடன்


ஷாலோம் கோய்க்கா (இராஜஸ்தான்) பேராலயத்திற்கு முன்பாக



ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாமில்
சிறப்பு கலாச்சார வரவேற்பு





ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாமில் தேவ செய்தியளிக்கும் சகோ. ஜெயசிங்

## சென்னை சகோ. ஜெயசிங் (D.S Family) குடும்பத்தினரின் பணித்தள வருகை மற்றும் டிக்கிடி கிராம ஆலய பிரதிஷ்டை

கர்த்தருடைய அநாதி தீர்மானத்தின்படி ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிடும்படியாகவும், ஆலயப்பிரதிஷ்டை செய்வதற்காகவும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 19–ம் தேதியன்று குஜராத் மாநிலத்தின் பரூச் நகரத்திற்கு சென்றடைந்தோம். அங்கு ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மறுதினம் நவம்பர் 20–ம் தேதி ஷாலோம் திருமண்டலம் உருவான நாள். சுதேச ஊழியர்கள் மற்றும் போதகர்களின் குடும்பத்தினருடன் நாங்களும் குடும்பமாக தேவனுக்கு நன்றி செலுத்தினோம். பீல் சுதேச ஊழியர்கள் குடும்பமாக சுமார் 1000 பேர் ஒன்றாக கூடி மகிழ்ச்சியோடு தேவனைத் துதித்து ஆராதித்தது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

ஊழியர்கள் மற்றும் ஊழியர்களின் மனைவிமார்களும் ஒரே மாதிரி உடை அணிந்து வந்திருந்தது பரலோகத்தைப் பார்த்தது போல் இருந்தது. அன்றைய தினம் காலை இரண்டாவது பகுதியில் நான் தேவ செய்தியளிக்க **சகோ. ஜெயராஜ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். மேலும் முகாமில் பரிசுத்த தோமாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய நாடகம் அரங்கேற்றப்பட்டது. நாடகம் இந்தி மொழியில் நடித்துக் காண்பிக்கப்பட்டது. ஆனாலும் அந்த நாடகத்தின் மூலம் நாங்கள் அனைவரும் மிகவும் ஈர்க்கப்பட்டோம். மேலும் தோமா எப்படி நமது பாரத தேசத்திற்கு வந்து எப்படி நற்செய்தி அறிவித்தார்? எப்படி எதிர்ப்புகளை எதிர்கொண்டார்? எப்படி இரத்த சாட்சியாக மரித்தார் என்பதை நாடகமாக நிகழ்த்திக் காட்டிய போது, கண்களில் எங்களை அறியாமலேயே கண்ணீர் நிரம்பியது. தோமாவைப் போல எங்களையும் பயன்படுத்தும் என அனைத்து ஊழியர்கள் மற்றும் ஊழியக்காரிகள் தங்களை அர்ப்பணித்து ஜெபித்தது மிகவும் சந்தோஷமாக இருந்தது. மேலும் திருவிருந்து ஆராதனையின் போது ஊழியர்கள் மற்றும் ஊழியக்காரிகள் அனைவரும் இயேசுவின் சிலுவைப்பாடுகளை நினைத்து, கண்களில் நீர் வடிய தங்களை அர்ப்பணித்து, கர்த்தருடைய பந்தியை அனுசரித்தது எங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கினது. அன்றைய தினம் மதிய வேளையோடு குடும்ப முகாம் நிறைவுபெற்றது.

நாங்களும் குடும்பமாக புறப்பட்டு, இரவில் தாகோத் சென்றடைந்தோம். மறுநாள் 21–ம் தேதியன்று எங்களது பேத்தியின் பிறந்த நாளை கொண்டாட தேவன் அநுக்கிரகம் செய்தார். அதற்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அதன் பின் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஷாலோம் பிஜல்பூர் பள்ளியையும், அங்கு தங்கி கல்வி பயிலும் மாணவச் செல்வங்களையும் காணும்படியாக பேராயர் அம்மா **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுடன் சென்றோம். அங்கு பள்ளியையும் வகுப்பறைகளையும் பார்வையிட்டோம். மேலும் அங்கு பயிலும் மாணவர்களை சந்தித்து அவர்களுக்கு குட்டி கதைகள் மற்றும் வேத வசனத்திலிருந்து ஒரு சில ஆலோசனைகளை வழங்கி, அவர்களுக்காக ஜெபித்தோம். மேலும் அனைத்து மாணவர்களுக்கும் பிஸ்கட் பாக்கெட்டுகளை வழங்கினோம். மாணவர்களும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டார்கள். இந்த மாணவச் செல்வங்கள் இந்த சிறிய

வகுப்பறைகளில் கல்வி கற்பதையும், அவர்கள் தங்கியிருப்பதையும் பார்த்து ஆச்சரியமடைந்தோம். எங்களது பகுதியில் பள்ளிக்கூடம் நடத்தும் எங்கள் மனதில் நல்ல பெரிய வகுப்பறைகள் மற்றும் தங்க விடுதியைக் கொண்ட நல்ல பள்ளிக்கூடம் கட்டிக்கொடுக்க வேண்டும் என்ற பாரம் எங்கள் உள்ளத்தில் வந்தது. தொடர்ந்து கோய்கா பேராலயத்தைப் பார்வையிட்டு, ஜெபித்துக் கடந்து சென்றோம்.

மறுநாள் 22–11–2015 ஞாயிற்றுக் கிழமையன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள ராணாப்பூர் தாலுகாவில் டிக்கிடி என்ற கிராமத்தில் எங்கள் குடும்பத்தின் சார்பில் புதிதாகக் கட்டப்பட்ட தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படியாக **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பத்துடன், நாங்களும் கடந்துச் சென்றோம். டிக்கிடி சபை ஊழியர். **ராலுசிங் ஹட்டிலா** அவர்கள் குடும்பம் மற்றும் விசுவாசிகள் மிகுந்த மகிழ்ச்சியுடன் எங்களை வரவேற்றார்கள். அதன் பின் ஜெபித்து தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்தோம். அனைவரும் உற்சாகத்துடன் துதித்துக் கொண்டே ஆலயத்திற்குள் நுழைந்தோம். பாடல் வேளையில் விசுவாசிகள் மகிழ்ச்சியோடு தேவனை ஆடிப்பாடி துதித்தார்கள். ஆராதனை வேளையில் கர்த்தருடைய பிரசன்னம் அளவில்லாமல் இறங்கியது. அதைத் தொடர்ந்து பீல் கலாச்சார முறையின்படி எங்களை சந்தோஷமாக வரவேற்றார்கள்.

அதைத் தொடர்ந்து நாங்கள் குடும்பமாக ஹிந்தி பாடல் ஒன்றை பாடினோம். அனைவரும் பாடலின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். தொடர்ந்து ஊழியர் குடும்பத்திற்கு பரிசுத்த வேதாகமத்தைப் பரிசாக அளித்து, அவர்கள் குடும்பத்திற்காக விசேஷமாக ஜெபித்தோம். அதன் பின் வேதத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். அனைவரும் செய்தியின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். பின்பு பேராயர் அவர்கள் ஆசீர்வாத ஜெபம் செய்ய ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை இனிதே நிறைவு பெற்றது. இறுதியாக கலந்துக் கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. அனைவரும் உணவை காகித தட்டில் வாங்கி சிறுவர் முதல் பெரியோர் வரை மண்தரையில் அமர்ந்து சாப்பிட்டது எங்களை வியக்க வைத்தது. இறுதியில் **போதகர். ராலுசிங் ஹட்டிலா** அவர்களின் சிறிய வீட்டிற்கு சென்று பார்த்தோம். அவருடைய பழைய படத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். ஒரு காட்டு வாசி மனிதனைப் போல இருந்த இவரை இவ்வளவு பெரிய சபையை உருவாக்கி நடத்துகிற அளவுக்கு தேவன் இவரை பயன்படுத்துவதை நினைத்து தேவனைத் துதித்தோம்.

இதை வாசிக்கும் அன்பர்களே, தேவனுடைய அழைப்பும், தரிசனமும் பெற்று தியாகத்துடன் பீல் மக்கள் மத்தியில் 25 ஆண்டுகளாக பணிபுரியும் அன்பு பேராயர்.தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்காக தேவனைத் துதிக்கிறேன். இந்த 2016 வெள்ளி விழா ஆண்டில் 1000 ஊழியர்கள், 1000 சபைகள் மற்றும் 1 இலட்ச குடும்பங்களை இயேசுவண்டை வழிநடத்த உண்மையாக உழைத்து வருகிறார்கள். இந்த பரம தரிசனப்பணியான ஷாலோம் பணிகளை இன்னும் அதிகமாக ஜெபித்து, ஆலயங்களைக் கட்டி கொடுக்கவும்; ஷாலோம் வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்றவும் **ரூ. 300 இலட்சங்கள்** தேவையுள்ளது. தேவையான நிதியுதவிக்கு உங்கள் பங்குகளை அனுப்ப அன்புடன் கேட்கிறோம். **தேவனுக்கே மகிமை!**

SHARING LOVE MISSION

***Shalom***

# அன்பு பகிர்வு இயக்கம்

**பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி தரிசன பணி**



பீல் ஆதிவாசி ஜனங்கள்

## ` ôúXôm

F ¯VITôûR«p
úRY ¡ÚûT« ]ôp

25 வது ஆண்டில்

£\|× F ¯V

§ hPA ± dû L

**1000 பீல் சுதேச ஊழியர்கள்**
**ஷாலோம் கிராம சபைகள்**



பீல் மக்களுக்காக இராஜஸ்தானில் கோய்கா கிராமத்தில்
கட்டப்பட்டுள்ள ஷாலோம் பேராலயம்

***"...நான் அந்தப் பரமதரிசனத்துக்குக்***
***கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை."***

– பரி. பவுல். (அப். 26:19)

## சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களிடமிருந்து....



***இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்!***

ஷாலோம் ஊழியத்தை 25 வருடங்களாக எனக்குத் தெரியும். இது தேவ தரிசனத்தின்படி ஆரம்பிக்கப்பட்ட ஊழியம். ஆவியானவரின் வழிநடத்துதல்படி நடத்தப்படும் ஊழியம். ஆகவே தான் **25 வருடத்திற்குள்** இந்த பீல் ஆதிவாசி மக்கள் மத்தியிலேயே **580 பீல் ஆதிவாசி ஊழியர்கள் எழுப்பப்பட்டு,** அவர்கள் மூலமாக **660 கிராமங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு, பல்லாயிரம் பீல் ஆதிவாசிக் குடும்பங்கள் தேவனண்டையில் வழிநடத்தப்பட்டுள்ளார்கள்.** கர்த்தர் எழுப்பியிருக்கிறார். மூன்று மாநிலங்களிலும் மூன்று திருமண்டலங்கள் உருவாகுமளவிற்கு தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்.

இதற்கு காரணம் தேவனால் அழைக்கப்பட்ட, தேவ தரிசனம் பெற்ற தேவ மனிதர் **பேராயர் தேவதாஸ்** அவர்களும், அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களும். இவர்களின் தியாகமான அர்ப்பணிப்பும், ஆத்தும பாரமும் தேவனைக் கவர்ந்துக் கொண்டது. ஆகவே தான் இந்த ஊழியத்திற்கு நீ உதவியாயிருக்க வேண்டும் என்று ஆண்டவர் என்னோடு பேசினார்.

கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து இந்த ஷாலோம் ஊழியத்தோடு நாங்கள் இணைந்து நிற்கிறோம். நீங்களும் இந்த ஊழியத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்த 25வது வருடத்தில் பல ஊழியத் திட்டங்களை நிறைவேற்றும்படி ஆவியானவர் திருவுளம் பற்றியிருக்கிறார். இந்த தேவத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க உங்கள் ஜெபமும், உதவியும் தேவை. 250 கிராம ஆலயங்கள் கட்டப்பட வேண்டும்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தானில் பேராலயம், ஊழியர் பயிற்சிக் கூடம், பணித்தள அலுவலகங்கள், பள்ளிக்கூடங்கள் கட்டப்பட வேண்டும். இந்த தேவத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க **ரூ. 1 லட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் தேவை.**

- உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது சபையின் சார்பிலோ பீல் மக்கள் மத்தியில் ஒரு ஆலயம் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- ரூ. 1 லட்சம் கொடுக்கக்கூடிய 300 பேரில் நீங்களும் ஒருவராயிருக்கலாம்.
- உங்களால் முடிந்த காணிக்கைகளை மேற்கண்ட திட்டங்களுக்கு கொடுத்து ஊழியங்களை ஜெபித்துத் தாங்கலாம்.

**"தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுகிற இந்த ஊழியத்திற்குக் கொடுக்கிற உங்களை கர்த்தர் ஆயிரம் மடங்காக ஆசீர்வதிப்பார்"**

**ஜெபிப்போம் ! .... செயல்படுவோம் !! ...... தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுவோம்!!! கிருபை உங்களோடிருப்பதாக!**

உங்கள் சகோதரன்,

Mohan C.L.

(சகோ. மோகன் சி. லாசரஸ்)

**நோக்கம் :** பாரத தேசத்தில் சுமார் 7000 கிராமங்களில் ஒரு கோடி மக்கள் தொகை உள்ள பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நம் தலைமுறையில் சுவிசேஷம் அறிவித்து கிறிஸ்துவின் திருச்சபையைக் கட்டுவதாகும்.

**பீல் மக்கள் கலாச்சாரம் :** பீல் என்ற வார்த்தை திராவிட மொழியிலிருந்து மருவி "வில்" என்னும் பொருள் கொண்டது. ஒவ்வொரு வீட்டிலும் வில், அம்பு, வாள் இவைகளை வைத்திருப்பார்கள். இவை வேட்டையாட அல்ல, திருடவும், கொள்ளையிடவும், சண்டையிடவும், தங்களைப் பாதுகாக்கவுமே பயன்படுத்துகிறார்கள்.

பீல் ஆதிவாசி மக்கள் சிறு கிராமங்களிலும், மலைப்பாங்கான குன்றுகளிலும், சிறிய குடிசைகள் அமைத்து அதைச் சுற்றிலும் உள்ள தங்கள் நிலத்தில் மக்காச்சோளத்தைப் பயிரிடுகின்றனர். இவர்கள் மக்காச்சோள ரொட்டிகளை எண்ணெயும் உப்பும் இல்லாமல் சுட்டு, கிடைக்கும் காய்கறிகளுடன், காரமான இஞ்சி, மிளகாய், பூண்டுகளைச் சேர்த்து உண்பார்கள். மௌவா என்ற பூவிலிருந்து சாராயத்தைக் காய்ச்சி, விற்றும் குடித்தும் வருகிறார்கள்.


குடும்பமாக சாராயம் காய்ச்சும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

பீல் மக்கள் மழையை நம்பி வாழ்கிறவர்கள். மழை பெய்யாவிட்டால் விவசாயம் செய்ய முடியாமல் பிழைப்பிற்காக கூலி வேலை செய்ய பெரிய நகரங்களுக்குச் சென்றுவிடுவார்கள். பெரும்பாலான கிராமங்களில் போக்குவரத்து, மின்சாரம், குடிநீர், மருத்துவம், பாடசாலை, போன்ற அடிப்படை வசதிகள் கூட கிடையாது. பிலோடி என்னும் எழுத்து வடிவில்லா மொழி பேசுகிறார்கள். இறந்த ஆவிகளையும் குலதேவதைகளையும் வழிபட்டு வருகிறார்கள். எல்லா வீடுகளிலும் பில்லிசூனியக் கட்டுகளும், பிசாசின் பிடிகளும் உண்டு. மந்திரவாதியை தெய்வமாகவும், குருவாகவும் நம்பி வாழ்கிறவர்கள். அந்தகாரத்தில் வாழும் இவர்கள் இந்தத் தலைமுறையில் இயேசு கிறிஸ்துவின் அன்பினை ஒரு முறை கூட கேள்விப்படாதவர்கள்.

**கல்வி பள்ளிக்கூட வசதி :** கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் அதிகம் இல்லாததால் கல்வி அறிவு மிகவும் குறைவாக உள்ளது. அப்படியே சில இடங்களில் பள்ளிகள் இருந்தாலும் சரியானபடி கல்வி கற்றுக் கொடுப்பதில்லை. மேலும் உள்ளடங்கிய பெரும்பாலான கிராமங்களில் உள்ள திருடர்கள் மற்றும் குடிகாரர்களின் நிமித்தமாக பயந்து அங்குள்ள பள்ளிக் கூடங்களுக்கு ஆசிரியர்கள் ஒழுங்காக வருவது கிடையாது. கிராமங்களில் ஆசிரியர்கள் சரியாக மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்காததால் பீல் மக்களுக்கு எழுத, வாசிக்க, எண்ண தெரியாது.


அழுக்குக் குட்டையில் இருந்து குடிக்க தண்ணீர் எடுக்கும் பெண்

**குடிநீர் வசதி :** பல நூற்றுக்கணக்கான கிராமங்களில் பரந்து வாழும் பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு நல்ல குடிநீர் வசதி கிடையாது. ஆழ் குழாய் குடிநீர் வசதி இருந்தாலும் அதிக தூரமாக இருக்கும். கோடை காலங்களில் வெகு தூரம் நடந்துச் சென்று நதி ஓரங்களில் குழியைத் தோண்டி அதில் வரும் தண்ணீரைக் குடிக்க பயன்படுத்துவார்கள்

## அழைப்பும் தரிசனமும்

**பேராயர். தேவதாஸ்** அவர்கள் சிவகாசி பட்டணத்தில் நல்ல பக்தியுள்ள கிறிஸ்துவக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தார். வாலிப வயதில் இவ்வுலகத்தில் உண்மையான அன்பும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல் தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினார். கோவை பட்டணத்தில் ஒரு ஆவிக்குரிய சபையில் மாலை ஆராதனையில் கல்வாரி அன்பே உலகத்தில் மேலான அன்பு என்ற நற்செய்தியைக் கேட்டு அர்ப்பணித்த போது சிலுவைக் காட்சியை கண்டார். அற்புத சுகம் பெற்று, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார். அந்த ஆராதனையில் தேவதாஸ் என்று பரிசுத்த ஆவியானவர் பெயர் சொல்லி அழைத்து, உன்னை ஒரு ஜாதி மக்களுக்கு அப்போஸ்தலனாக அனுப்பி, அவர்களுக்கு ஆசீர்வாதமாக உன்னைப் பயன்படுத்துவேன் என்று 19வது வயதில் திருவுளம் பற்றினார். 1981ம் ஆண்டு 21ம் வயதில் ஊழிய அழைப்பைப் பெற்று நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 5 வருடங்கள் வட இந்தியாவில் பணியாற்றினார்.

**சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் நாசரேத் ஊரைச் சார்ந்தவர். அவர் தனது வாலிப வயதில் படித்து முடித்து, நல்ல வேலையில் சேர்ந்து பணம் சம்பாதித்து குடும்பப் பொறுப்புகளை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் **“யார் என் காரியமாய் போவான்”** என்ற தேவ குரலுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து இந்திய மிஷனெரி சங்கத்தில் 1983 முதல் ஒரிசாவில் மல்கன்கிரி பணித்தளத்தில் மிஷனெரியாக பணியாற்றினார்கள்.



தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படி 1985ம் வருடம் ஜுலை 8ம் நாள் திருமணத்தில் இணைக்கப்பட்ட இவர்கள் முதல் வாரத்தில் கூடி தங்கள் சாட்சிகளை பகிர்ந்துக் கொண்டு ஜெபித்த வேளையில் தேவன் கைகளில் வில் அம்பு வைத்த பீல் ஆதிவாசி மக்களைக் காண்பித்து இந்த ஜாதி மக்களைத்தான் உங்களுக்குத் தருவேன் என தரிசனம் தந்தார். இந்திய மிஷனெரி சங்கத்தின் மூலம் 1985 – 1990 வரை வல்லமையாக பீல் மக்கள் மத்தியில் சுவிசேஷம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார்.

1991ம் ஆண்டு ஜுலை முதல் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதலின்படி இரு மிஷனெரி ஸ்தாபனத்தில் 10 வருட உண்மையான தொண்டின் அனுபவத்துடன் முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்திற்காக தேவன் தந்த அழைப்பின்படி குஜராத்தில் ஜாலோத் என்ற பணித்தளத்தில் கிடைத்த பேய் பங்களாவில் பழைய சைக்கிள் ஒன்றைப் பயன்படுத்தி நற்செய்தி பணியை செய்ய SHARING LOVE MISSION (அன்பு பகிர்வு இயக்கம்) உருவாக்கி செயல்படுத்த தேவன் கிருபை செய்தார்.


பேய்வீடு என்று அழைக்கப்பட்ட வீடு

ஆரம்ப நாட்களில் ஊழியத்தில் பலவிதமான சோதனைகள், கஷ்டங்கள், பிரச்சனைகள் மத்தியில் குறிப்பாக, மூன்றாவதாகப் பிறந்த குழந்தை ஷாரோன் நோய்வாய்ப்பட்ட போது சரியான மருத்துவ வசதி கிடைக்கப் பெறாமல் அந்தக் குழந்தையை இழக்க நேரிட்டது. கோதுமை மணியாக தேவன் பீல் மக்கள் பூமியில் விழும்படியாக கிருபை தந்தார்.

கிடைத்த பேய் பங்களாவில் ஆரம்பித்த சிறிய சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்துக் கொண்ட இரண்டு ஆதிவாசி குடும்பங்கள் இயேசுவின் நாமத்தில் பிசாசின் பிடியிலிருந்தும், நோய் கட்டிலிருந்தும் அற்புத விடுதலைப் பெற்றார்கள். அவர்கள் சாட்சியின் மூலமாக 20 பேர், 40 பேர்கள் என வாரக்கூட்டத்தில் கலந்துக் கொண்டவர்கள் பெற்றுக் கொண்ட அற்புத சாட்சிகள் மூலம் 500 பேர்களுக்கு மேலாகக் கூடிவர ஆரம்பித்தார்கள்.

**பீல் சுதேச ஊழியர்கள் :**

7000 க்கும் அதிகமான கிராமங்களில் வாழும் சுமார் 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும், இரட்சிக்கப்படவும் தேவன் தமிழ்நாட்டிலிருந்து அல்ல, பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களையே எழுப்ப பாரம் தந்தார். ஒரு மாத வேதாகம மற்றும் ஊழியப் பயிற்சி கொடுத்து சொந்தக் கிராமங்களில் ஊழியம் செய்ய பீல் சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தந்தார். தேவ கிருபையால் இதுவரை 580 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர் குடும்பங்களை பயிற்சி கொடுத்து எழுப்ப தேவன் கிருபை தந்துள்ளார். பயிற்சி பெற்று பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக தேவன் பலத்த அற்புத அடையாளங்களை நடப்பித்து சுமார் 660 கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும், பல்லாயிர பீல் ஆதிவாசி குடும்பங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் கிருபை தந்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## ஷாலோம் திருச்சபை வளர்ச்சிப் பணிகள்

- ❖ மாதந்தோறும் 580 பீல் சுதேச ஊழியர்களுக்கான சிறப்பு கூடுகை.
- ❖ வருடந்தோறும் 5000 சபை மூப்பர்களுக்கு முகாம்கள்.
- ❖ வருடந்தோறும் 10,000 சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள்.
- ❖ பிராந்தியங்கள் வாரியாக பெண்கள் எழுப்புதல் முகாம்கள்.
- ❖ 400 சபைகளில் ஓய்வுநாள் பாடசாலை.
- ❖ 40,000 சிறுவர்களுக்கான 10 நாட்கள் விடுமுறை வேதாகமப் பள்ளி.
- ❖ வருடந்தோறும் 580 பீல் சுதேச ஊழியர் குடும்ப அக்கினி முகாம்.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக 2000க்கும் அதிகமான பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வி உதவிப் பணி.
- ❖ ஷாலோம் ஜெப மையம்.
- ❖ ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை ஊழியங்கள்.
- ❖ 300க்கும் அதிகமான கிராமங்களுக்கு குடிநீர் வசதி.
- ❖ வருடந்தோறும் சுமார் 10,000 வேதாகமங்கள் வழங்குதல்.
- ❖ மாதந்தோறும் 48 இடங்களில் அற்புத சுகமளிக்கும் நற்செய்திக் கூட்டங்கள்.
- ❖ 600க்கும் அதிகமான கிராமங்களில் ஆலய ஆராதனை.
- ❖ ஆவிக்குரிய புத்தகங்கள், CD, DVD போன்ற இலக்கிய சேவை.
- ❖ 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும், தேசத்திற்காகவும் ஜெபிக்க
- ❖ ஷாலோம் திருமண்டல பணிகள் மற்றும் தரிசனத் தலைவர்களை உருவாக்குதல்.
- ❖ வருடந்தோறும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான வேதாகமங்களை குறைந்த விலையில் வழங்குதல்
- ❖ மற்றும் பல எழுப்புதல் பணிகள்.

## ஷாலோம் பணித்தளங்களில் கட்டப்பட்டுள்ள 313 கிராம ஆலயங்களில் சில


பாரேவா கிராம ஆலயம், குஜராத்


பாட்டன்புரா கிராம ஆலயம், குஜராத்


கர்வாணி கிராம ஆலயம், குஜராத்


டும்மட் கிராம ஆலயம், இராஜஸ்தான்


பாடிலசோடி கிராம ஆலயம், இராஜஸ்தான்


தான்புரி கிராம ஆலயம், இராஜஸ்தான்


உதய்பூரா கிராம ஆலயம், ம.பி.


காளாகேத் கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்


ரூட்பாகேடா கிராம ஆலயம், மத்தியப்பிரதேசம்

## ஷாலோம் கிராம ஆலயங்கள்

தேவ கிருபையால் பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக உருவாக்கப்பட்ட 660 கிராம சபைகளில் வாரந்தோறும் ஆராதனைகள் மற்றும் உபவாச ஜெபம், அற்புத விடுதலைக் கூட்டங்கள் தவறாது நடைபெற்று வருகிறது. சுதேச ஊழியர்கள் தங்கள் கிராமத்தில் தங்கள் சொந்த நிலங்களை கொடுக்க முன்வருகிறார்கள். 25 குடும்பங்கள் விசுவாசிகளாகவும், சபைகளில் 7 மூப்பர்கள் உருவாக்கப்பட்ட பின்பு, அர்ப்பணிக்கப்பட்ட நிலத்தில் ஷாலோம் ஊழியத்தின் சார்பில் 35x20, 40x20, 50x20 அளவுகளில் முறையே **ரூ. 2 இலட்சம், ரூ. 3 இலட்சம், ரூ. 5 இலட்சம்** மதிப்புகளில் தளவாடப் பொருட்கள் வாங்கிக் கொடுக்கப்படுகிறது. அவர்களே கட்டுமான பணிகளுக்கு உதவி செய்து கட்டி எழுப்பி உள்ளார்கள். இதுவரை தேவ கிருபையால் **313 கிராம ஆலயங்கள்** கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த வெள்ளிவிழா ஆண்டிற்குள் **(2015 – 2016) இன்னும் 250 கிராமங்களில்** உடனடியாக ஆலயங்கள் கட்டப்பட வேண்டும். **தேவனுக்கே மகிமை!**

**2016 ஆம் ஆண்டிற்குள் பணித்தளங்களில்**
**250 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்பட ஜெபியுங்கள்!**
**ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.**



ஷாலோம் திருமண்டலம் துவக்கவிழா - 20.11.2009

போதகர்களாக அபிஷேகம் பண்ணப்பட்ட 77 பீல் சுதேச ஊழியர்களுடன்
சகோ. மோகன் சி. லாசரஸ் மற்றும் பேராயர் வே. தேவதாஸ்



Allahabad Bible Seminary - ல் தொலை தூரக் கல்வி மூலம்
B.T.S., (Bachelor of Theological Studies) படித்து முடித்து பட்டம் பெற்ற
நமது ஷாலோம் பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்







**பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்**

ஒவ்வொரு பீல் ஆதிவாசி குடும்பங்களுக்கும் குறைந்த விலையில்
ஒவ்வொரு வருடமும் குறைந்தது 10 ஆயிரம் வேதாகமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகள்





**பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் கல்விப் பணிகள்**







**ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை மூலம் நடைபெறும் மருத்துவப் பணிகள்**





**CBN ஸ்தாபனத்துடன் இணைந்து 200க்கும் அதிகமான பீல் ஆதிவாசி கிராமங்களில் ஆழ்துழாய் கிணறுகள் மூலம் குடிநீர் வசதி**

தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 580 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.



சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

### ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். (Shalom Bhavan, Dahod - Gujarat)

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.




ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- ❖ 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- ❖ சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ❖ ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- ❖ நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- ❖ தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- ❖ பீல் மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் 24 மணி நேரமும் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- ❖ Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- ❖ Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ❖ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- ❖ Sponsor Related Department. ❖ Car & Two Wheeler Parking வசதி.
- ❖ பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- ❖ மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்

இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகலில் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம், பிஜல்பூர், இராஜஸ்தான்.

## மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது

- ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)
- ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து **"ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி"** என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**"…..எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18

## பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் நடைபெறும் நற்செய்தி பணியில் வெள்ளி விழா ஆண்டு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றும் பணியில் உங்கள் பங்கு

வெள்ளிவிழா ஆண்டில் (2015–2016) 250 கிராம ஆலயங்கள் கட்டிமுடிக்கப்பட **ரூ. 5 லட்சங்கள், ரூ. 3 லட்சங்கள், ரூ. 2 லட்சங்கள்** அல்லது உங்களால் முடிந்த நிதி உதவி அனுப்பி கிராம ஆலயங்களைக் கட்டித் தரலாம்.

(1) குஜராத், தாகோத்தில் ஷாலோம் திருமண்டல அலுவலகம், பணித்தள அலுவலகம் மற்றும் ஷாலோம் ஜெப மையம் – ஷாலோம் பவன்

(2) மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் கட்டப்படவுள்ள ஷாலோம் பேராலயம் மற்றும் ஊழியர் பயிற்சிக் கூடம்.

(3) இராஜஸ்தானில், பிஜல்பூர் கிராமத்தில் ஷாலோம் பள்ளி 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பள்ளிக்கூடம் மற்றும் ஆதிவாசி மாணவர் விடுதி.

மேற்கண்ட மாபெரும் மூன்று வெள்ளிவிழாத் திட்டங்களையும் நிறைவேற்ற தேவையான **ரூ. 300 இலட்சங்கள்** சந்திக்கப்பட உங்கள் பங்காக **ரூ. 1 இலட்சம்**, **ரூ. 50 ஆயிரம்**, **ரூ. 20 ஆயிரம்**, **ரூ. 10 ஆயிரம்** அல்லது உங்களால் முடிந்த காணிக்கை கொடுத்து தாங்க முன் வாருங்கள்.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009 (IFS Code : TMBL0000106)** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373 (IFS Code : UTIB0000105)** |
| **ICICI** வங்கிக் கணக்கு எண் | : | **613901112799 (IFS Code : ICIC0006139)** |

**SHARING LOVE MISSION**
தலைமை அலுவலகம்
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. Tamil Nadu. Phone: 0461 - 2375468,
Cell : 9345675468 (Bro. Sam Gunaseelan)

**SHARING LOVE MISSION**
பணித்தள அலுவலகம்
Shalom Bhavan, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat. Ph. : 02673 - 268480,
Cell : 09377445468 (Bishop. V. Devadass)
E-mail : bishop@shalommission.in

**email : info@shalommission.in website : www.shalommission.in**

**இதைப் படித்தபின்பு மற்றவர்களுக்குக் கொடுத்து ஊழியத்தை அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம். நன்றி!**

# ù_TdÏ ±l×Ls…



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

- ◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

- ◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 313க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.
- ◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

- ◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.
- ◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.
- ◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் சகோதரி ஷெக்கினா அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

- ◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.
- ◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.

◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருமண்டலத்திற்காக...**

◎ ஷாலோம் திருமண்டலத்தின் கீழ் இயங்கி வரும் திருச்சபை பணிகளுக்காக, திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஜெபியுங்கள்.

◎ இதுவரை கட்டப்பட்டுள்ள 320 கிராம ஆலயங்களுக்காக, திருச்சபைகள் வளர்ந்து பெருகவும் அநேக ஆத்துமாக்கள் திருச்சபைக்கு வரவும், திருச்சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்கள் செய்யவும் ஜெபியுங்கள்.

◎ கட்டப்பட்டு வரும் கிராம ஆலயப் பணிகள் தடைகளின்றி நிறைவு பெறவும், ஆலயம் அவசியமாகத் தேவைப்படும் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான ஆதரவாளர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

**புதிய ஆண்டிற்காக**

◎ இந்தப் புதிய ஆண்டில் தேவன் நமது வாழ்க்கையிலும் ஊழியங்களிலும் தருகின்ற வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் நிறைவேற்றவும், இந்தப் புதிய ஆண்டு மிகவும் ஆசீர்வாதமான ஆண்டாக அமையவும், இந்த ஆண்டில் தேவன் ஊழியப்பாதையில் தந்துள்ள அனைத்து திட்டங்களை நிறைவேற்ற கிருபை தரவும் ஜெபியுங்கள்.

◎ பணித்தளங்களில் இந்த வெள்ளி விழா ஆண்டில் நிறைவேற்றப்படவிருக்கும், திட்டங்களையும், ஊழியங்களையும் தேவன் ஆசீர்வதிக்கவும், தேவைகளை சந்திக்கவும் ஜெபியுங்கள்

◎ பணித்தளங்களில் காணப்படும் எதிர்ப்புகளை தேவன் மாற்றவும், நல்ல திறந்த வாசலை ஊழியங்களுக்குத் தரவும் ஜெபியுங்கள்.

## ஷாலோம் ஜெப மையம் தொலைபேசி ஜெப ஊழியத்தின் மூலம் தேவன் செய்த மகத்தான காரியங்கள்

1. பெயர் : சுபாஷ் கராசியா – கிராமம் : குல்தா விர்ஜி

ஒரு வாரமாக எனக்கு வாந்தி வரும்போதெல்லாம் இரத்தம் அதிகமாக வரும். ஷாலோம் ஜெப மையத்தை தொடர்பு கொண்டு ஜெபித்த போது எனக்கு பரிபூரண சுகம் கிடைத்தது.

2. பெயர் : கைலாஷ் – கிராமம் : சஜேலி

எனக்கு கடந்த ஒரு மாதமாக கடுமையான காய்ச்சலும் வயிற்றில் எரிச்சலும் இருந்தது. இந்நிலையில் ஷாலோம் ஜெப மையத்தைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்த போது தேவன் எனக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

3. பெயர் : சோம்லி மக்வானா – கிராமம் : சீராமகுடி

எனது பெயர் சோம்லி மக்வானா. எனது கணவர் பெயர் தாஜு மக்வானா. நாங்கள் சீராமகுடி கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறோம். ஒரு நாள் நாங்கள் ஊழியத்தை முடித்து மாலை 7 மணியளவில் வீடு திரும்பும் நேரத்தில் என்னை விஷப் பாம்பு கடித்தது. உடனே ஷாலோம் ஜெப மையத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபித்தோம். ஜெப வீரர்கள் எனக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு அற்புதம் செய்தார். நான் எப்பொழுதும் போல நலமாக இருக்கிறேன்.

4. பெயர் : ராகேஷ் சந்திர கட்டாரா – கிராமம் : அந்தேஸ்வர்

எனது பெயர் ராகேஷ். எனது தகப்பனார் பெயர் ரமேஷ்சந்திர கட்டாரா, ஷாலோம் ஊழியத்தில் ஊழியம் செய்து வருகிறார். நான் வேதாகமக் கல்லூரியில் C.Th முதலாம் ஆண்டு பயின்று வருகிறேன். கல்லூரியில் நடைபெற்ற 21 நாட்கள் உபவாச ஜெபத்தில் நானும் உபவாசம் இருந்தேன். 15–வது நாள் ஆன போது எனது மனநிலை பாதிக்கப்பட்டு பயித்தியம் போல் ஒன்றும் அறியாமல் கல்லூரியை விட்டு வெளியேறி விட்டேன். அங்கு அருகில் உள்ள ரயில் நிலையத்தில் என்னை அறியாமலேயே ஜபல்பூர் செல்லும் வண்டியில் ஏறி விட்டேன். அங்கிருந்து மத்தியப்பிரதேசத்தில் போபால் நகரத்திற்கு சென்றேன். அங்கிருந்து இந்தோர் நகரத்திற்கு சென்றேன். 4 நாட்களாக நான் என்ன செய்கிறேனென்று தெரியாமலேயே இருந்தேன். பசியும் பட்டினியுமாக இருந்தேன். சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல் சாலையில் கிடந்த மிச்ச மீதி உணவுகளை சாப்பிட்டேன். கையில் பணமும் இல்லை.



இந்நிலையில் எனது கல்லூரி நிர்வாகம் எனது தந்தைக்கு தொலைபேசியின் மூலம் நான் காணவில்லை என்றதகவல் அளித்தனர். எனது தந்தையும் பயந்து நான் தங்கி பயின்றஇடத்திற்கு வந்து மிகவும் தேடினார். ஆனாலும் என்னை கண்டுபிடிக்க முடியவில்லை. உடனே எனது தகப்பனார் ஷாலோம் ஜெப மையத்தை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நடந்ததை சொல்லி ஜெபிக்கும்படி கேட்டு கொண்டார். ஜெப மையத்திலும் ஜெப வீரர்கள் பாரத்துடன் ஜெபித்தனர். அன்றைய தினமே அங்கிருந்து எப்படியோ தாகோத் வந்து சேர்ந்தேன். தாகோத் வந்த பிறகு தான் எனக்கு நினைவு திரும்பியது. உடனே எனது தகப்பனாரை நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நான் தாகோத்தில் இருப்பதாக கூறினேன். தேவன் ஜெபத்தைக் கேட்டு அதே நாளில் எனக்கு நினைவு திரும்பப் பண்ணி சுகத்தைத் தந்து, என்னை பிசாசின் பிடியிலிருந்தும், தந்திரத்திலிருந்தும் மீட்டு கொண்டார். அதற்காக தேவனைத் துதிக்கிறேன்.

ஷாலோம் கிராம ஆலயம்

# பீலிப்பாடா

## இராஜஸ்தான்



பீலிப்பாடா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த கிராம மக்கள் சாராயம் காய்ச்சி குடிப்பதோடு, பீடி, தம்பாக்கு இன்னும் அநேக பாவ பழக்க வழக்கங்களுக்கு அடிமைகளாகவும், விக்கிரக ஆராதனைக் காரர்களாகவும் வாழ்கின்றவர்கள்.

இவர்கள் மத்தியில் பிறந்து வளர்ந்தவர்தான் சகோ. ஹிராலால் பகோரா. இவர் கிறிஸ்து இயேசுவை அறிந்து கொள்வதற்கு முன்பதாக இவரும் இதே போன்று சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற போதை வஸ்துகளுக்கும் பாவங்களுக்கும் அடிமையாகவே வாழ்ந்து வந்தார். இந்த சூழ்நிலையில் இவர் பிசாசின் பிடியில் சிக்கி ஒரு வருடமாக வேதனைப்பட்டு வந்தார். அநேக இடங்களுக்குச் சென்று மருத்துவம் மற்றும் மந்திரக் கிரியைகள் செய்தும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் கும்புரா சபை போதகர் சகோ. பத்தியா கராசியா அவர்களிடம் ஜெபிக்கும்படியாகச் சென்றார். அவருக்காக ஜெபித்தபோது தேவன் பிசாசின் பிடியில் இருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார். இந்த அற்புதத்தின் மூலம் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு பேடவ் சபையில் இணைந்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தார்.

தேவன் ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையைக் கொடுக்கவே, தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, ஒரு மாத ஊழியர் பயிற்சி பெற்று தனது சொந்த கிராமத்தில் ஊழியத்தினை ஆரம்பித்தார். சகோ. தல்சிங் சர்போட்டா என்பவர் மனநிலை சரியில்லாமல் இருந்தார். இவருக்காக, ஊழியர் சகோ. ஹிராலால் பகோரா அவர்கள் ஜெபித்தபோது தேவன் அவருக்கு தெளிவான மனநிலையைக் கொடுத்தார். மேலும் கமம்மிலா பேன் என்ற சகோதரிக்கு 7 வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்தது அவருக்காகவும் ஜெபித்தபோது, தேவன் ஆண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார். இந்த அற்புதங்களைக் கண்ட கிராம ஜனங்கள் அநேகர் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு சபைக்கு வர ஆரம்பித்தனர். ஆரம்ப நாட்களில் அநேக எதிர்ப்புகள் இருந்தாலும், ஜெபத்தின் மூலம் தேவன் எதிர்ப்புகளை மாற்றினார். சபை வளர்ந்து பெருகியது. தற்போது 45க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆராதனை செய்து வருகின்றனர். தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே, அந்த சபையின் மூப்பர் காணிக்கையாகக் கொடுத்த நிலத்தில் தேவ நாம மகிமைப்படும்படியாக புதிய ஆலயம் ஒன்று ரூ. 2.2 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, 06.11.2015 அன்று சகோ. சவுந்தர்ராஜ் அவர்கள் மூலம் ஜெபித்துப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டத்தைச் சேர்ந்த **சகோ. சவுந்தர்ராஜ்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில் 2016ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**



# ஷாலோம் கிராம ஆலயம்
# சிமல்கேடா
## இராஜஸ்தான்

சிமல்கேடா என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்தில் சஜன்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம் காய்ச்சுவதும், சண்டை போடுவதும், திருடுவது மற்றும் விக்கிரக ஆராதனை செய்யும் பழக்கமுடையவர்கள். ஊழியர் ரமேஷ் டின்டோடு அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார்.

இவருடைய வீட்டில் உள்ள பசு மாடு சுகவீனப்பட்டு, பால் கரக்கும் போது இரத்தமாக வந்தது. அதற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஷாலோம் விசுவாசி சம்மு கலாசுவா அவர்கள் வந்து ஜெபித்த போது மாடு சுகம் பெற்றது. அதன் மூலம் ரமேஷ் டின்டோடு இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்பு ஷாலோம் கதேடியா சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்றார்.

பின்பு 1999–ம் ஆண்டில் தனது வீட்டில் 5 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்ப நாட்களில் கூட்டம் நடத்துவதற்கு பல்வேறு எதிர்ப்புகள் வந்தது. ஆனாலும் சபையார் மற்றும் மூப்பர்கள் சோர்ந்து போகாமல் உபவாசத்தோடு ஜெபித்ததில் எதிர்ப்புகள் மாறினது. கூட்டத்திற்கு மன நிலை சரியில்லாத கெம்ஜி பாய் என்ற சகோதரரை அழைத்து வந்தார்கள்.

ஊழியர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தைக் கேள்விப்பட்டு, கூட்டத்திற்கு அநேக ஜனங்கள் வந்தார்கள். இப்படியாக சபை வளர்ந்து பெருகியது. தற்போது 35 குடும்பங்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, சபையில் ஆராதித்து வருகிறார்கள். இந்நிலையில் ஊழியர். ரமேஷ் டின்டோடு அவர்கள் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தற்போது தேவ நாம மகிமைக்காக புதிய ஆலயம் ரூ. 2.5 இலட்சம் செலவில் கட்டப்பட்டு, சகோ. ஜாண்சன் அவர்கள் மூலமாக 08–11–2015 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

இந்த ஆலயம் முழுகோட்டைச் சேர்ந்த **சகோ. ஜாண்சன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியினாலும், மேல்புரத்தை சேர்ந்த **சகோ. பால்சன்** அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியினாலும் கட்டப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி மாவட்டம் சகோ. ஜார்ஜ், சகோ. ஜாண்சன் மற்றும் சகோ. சவுந்தர்ராஜ் ஆகியோரின் பணித்தள வருகை


கலாச்சார வரவேற்பு – சிமல்கேடா, இராஜ்


சிமல்கேடா (இராஜ்) கிராம ஆலயப் பிரதிஷ்டை


சிமல்கேடா (இராஜ்) கிராம ஆலயத்தில் கூடி தேவனை ஆராதிக்கும் விசுவாசிகள்


பீலிபாடா (இராஜ்) கிராம ஆலய பிரதிஷ்டை


சகோ. சவுந்தர்ராஜ் அவர்களின் பகிர்வு வேளை


Prof. ஜார்ஜ் அவர்களின் பகிர்வு வேளை


சகோ. ஜாண்சன் அவர்களின் பகிர்வு வேளை


காளாகேத் (ம.பி.) கிராம ஆலயத்திற்கு முன்பாக


ஷாலோம் பணித்தள அலுவலகத்திற்கு முன்பாக

# Lu²VôÏU¬ UôYhPm NúLô. _ôow, NúLô. _ô i Nu Utßm

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 6 முதல் 9–ம் தேதி வரை ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிட்டோம். நவம்பர் 5–ம் தேதி இரவு ஷாலோம் பணித்தளத்தை சென்றடைந்தோம். மறுநாள் 6–ம் தேதியன்று **சகோ. சாமுவேல்** அவர்களுடன் இராஜஸ்தானிலுள்ள கும்புரா மற்றும் கோய்கா ஆலயங்களைப் பார்வையிட்டு, ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்தோம். தொடர்ந்து இராஜஸ்தானிலுள்ள பீலிப்பாடா என்ற கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படியாக கடந்து சென்றோம். அங்கு சபை விசுவாசிகள் எங்களை உற்சாகமாக வரவேற்றார்கள்.

அதன் பின் ஜெபித்து ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தோம். பாடல் வேளையில் அனைவரும் ஆடிப்பாடி தேவனைத் துதித்தார்கள். ஆராதனை வேளையில் கர்த்தருடைய மகிமை இறங்கி வந்தது. அதைத் தொடர்ந்து பீல் கலாச்சார முறையின்படி எங்களை வரவேற்றார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. சவுந்தர்ராஜ்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து **சகோ. ஜாண்சன்** அவர்கள் தேவ செய்தியை வழங்க **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். தொடர்ந்து **சகோ. ஜார்ஜ்** அவர்கள் வேத வசனத்திலிருந்து சில ஆலோசனைகளைக் கூறி, ஜெபித்தார்கள். அதோடு ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை நிறைவு பெற்றது. முடிவில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. மறுநாள் 7–ம் தேதியன்று மத்தியப்பிரதேசத்திலுள்ள அந்தர்வேலியா கிராமத்தில் நடைபெறும் Compassion CDC Project – மாணவர்களை சந்தித்து ஜெபித்தோம்.

அதைத் தொடர்ந்து காளாகேத், நவாப்பாடா, மாண்ட்லி, ரூப்பாகேடா, மற்றும் விசல்பூர் ஆகிய கிராம ஆலயங்களையும், ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்து திரும்பினோம். மறுநாளன்று 8–ம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று குஜராத்திலுள்ள தெல்சர், கங்கேலா கிராம ஆலய ஆராதனையிலும் மத்தியப்பிரதேசத்திலுள்ள பிட்டோல் கிராம ஆலய ஆராதனையிலும் கலந்துக் கொண்டு வாழ்த்துச் செய்திகளை வழங்கி, ஜெபித்தோம். அதைத் தொடர்ந்து இராஜஸ்தானில் சிமல்கேடா என்ற கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யும்படியாக கடந்து சென்றோம்.

அங்கு சபை விசுவாசிகள் எங்களை உற்சாகமாய் வரவேற்றார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் முன்னிலையில் **சகோ. ஜாண்சன்** அவர்கள் ஜெபித்து ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்தார்கள். விசுவாசிகள் சந்தோஷத்துடன் துதித்துக் கொண்டே ஆலயத்திற்குள் பிரவேசித்தார்கள். பாடல் வேளையில் அனைவரும் நடனத்துடன் தேவனை துதித்துப் பாடினார்கள். ஆராதனை வேளையில் அனைவர் மீதும் தேவப் பிரசன்னம் இறங்கி வந்தது. தொடர்ந்து எங்களை பீல் கலாச்சார முறையின்படி வரவேற்றார்கள். அதைத் தொடர்ந்து **சகோ. ஜாண்சன்** அவர்கள் தேவ செய்தியளிக்க, **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் மொழிபெயர்த்தார்கள். இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் விசேஷமாய் தனித்தனியே

ஜெபித்தோம். ஆசீர்வாத ஜெபத்துடன் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. மேலும் **சகோ. ஜாண்சன்** மற்றும் **சகோ. சவுந்தர்ராஜ்** அவர்கள் ஆதரித்து வரும் ஊழியர் மற்றும் ஆதிவாசி பிள்ளையையும் சந்தித்து, ஜெபித்தோம். அன்றைய தினம் **சகோ. சவுந்தர்ராஜ்** அவர்கள் பணித்தளத்திலிருந்து புறப்பட்டு சென்றார்கள். மறுநாளன்று 9–ம் தேதி குஜராத்திலுள்ள ரீசும்புரா, பாரேவா, மற்றும் கொலானா கிராம ஆலயங்களைப் பார்வையிட்டு, ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்தோம். தொடர்ந்து ஹிரோலா கிராமத்தில் நடைபெற்று வரும் Compassion CDC Project – மற்றும் மாணவர்களையும் சந்தித்து, அவர்களுக்கு வேதத்திலிருந்து ஆலோசனை வழங்கி, அவர்களுக்காக ஜெபித்து கடந்து சென்றோம்.

சபைகளில் விசுவாசிகளின் கூட்டம் இடம் கொள்ளாமல் நிரம்பி வழிகிறது. ஆராதனையில் சிறுபிள்ளை முதல் பெரியவர்கள் வரை ஆவியின் அபிஷேகம் பெற்று மூன்று நான்கு மணி நேரம் இடைவிடாமல் துதித்து ஆராதிப்பதை பார்ப்பது ஆச்சரியமாக இருந்தது. சில சபைகளில் இடப்பற்றாக்குறையினால் 2 ஆராதனைகள் நடைபெறுகிறது. ஷாலோம் ஊழியத்தில் ஆலயம் கட்டிக் கொடுத்து நல்ல நிலத்தில் விதைத்தோம் என்ற சந்தோஷமும் திருப்தியும் எங்களுக்கு ஏற்பட்டது.

இந்த நான்கு நாட்களும் பணித்தளப்பார்வை மற்றும் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனைகளும் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. இந்த ஷாலோம் ஊழியத்தில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் தந்த திறந்த வாசலுக்காக தேவனைத் துதிக்கிறோம். இதை வாசிக்கிற ஒவ்வொரு தேவ பிள்ளைகளும் இன்னும் அதிகமாக ஜெபித்து தாங்கவும் அநேகருக்கு ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்தவும் கேட்கிறேன். **தேவனுக்கே மகிமை!**

**Prof. ஜார்ஜ்** (Retd) (ஷாலோம் ஊழிய செயற்குழு உறுப்பினர்)

**சகோ. ஜாண்சன்** (ஷாலோம் ஊழிய பிரதிநிதி)

**சகோ. சவுந்தர்ராஜ்** (ஷாலோம் ஊழிய ஆதரவாளர் குடும்பம்)

---

## *ஷாலோம் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை*

### கன்னியாகுமரி – 22.11.2015

தேவனுடைய பெரிதான கிருபையினால், கன்னியாகுமரி, இயேசுவின் அக்கினி ஜுவாலை ஊழிய சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. லாலு ஜோதி கராசியா** அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் மிஷனெரி தனது அனுபவ சாட்சியினை பகிர்ந்து கொண்டார். **சகோ. செல்வதுரை** அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டைக்கு வாய்ப்பளித்த சபை போதகர் **Pr. பிரான்சிஸ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு பிப்ரவரி - 2016 -லிருந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

---

**‘‘... சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது’’. பிலி. 4:3.**

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- ❖ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ❖ காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ❖ **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- ❖ உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- ❖ நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- ❖ எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**
Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

**AXIS BANK**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9345675468**

## EeLsù_TER®dÏ
## `ôúXôm ¡û[ AÛYXLeL° u ØLY¬Ls

**HEAD OFFICE**

**SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>M.T.N. Building, North Street,<br>Near Women's Police Station,<br>Marthandam, K.K. Dist. - 629165<br>Cell : 9487689869, 9698844511 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Prabhakaran. P.**<br>C/o. Mr. P.Immanuel,<br>C-2, Plot No.123-Old Mhada Colony,<br>Mangalya Co.Op.Society Ltd,<br>Pokharan Road No.2,<br>Thane West - 400610<br>Cell : 9768282699 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522, 9688444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

**AXIS BANK**

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

## நாட்டு நடப்புச் செய்திகள்

உலகளவில் நடைபெறும் ஆடவருக்கான டென்னிஸ் போட்டிக்கு அளிக்கப்படும் டேவிஸ் கோப்பையை பிரிட்டன் அணி வென்றுள்ளது. இறுதிப் போட்டியில் பிரிட்டன் அணி பெல்ஜியத்தை வென்றது. மிகவும் பெருமை வாய்ந்த இந்த கோப்பையை பிரிட்டன் அணி 1936ஆம் ஆண்டிற்குப் பிறகு முதன் முதலாக வென்றுள்ளது. தனி நபர்களுக்கு இடையேயான கடைசிப் போட்டியில் ஆண்டிமார்ரி பெல்ஜியத்தின் டேவி கோஃபினை வென்றதன் மூலம் கோப்பையை கைப்பற்றியது.

---

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள அனைத்து பள்ளிகளும் வெடிகுண்டு மிரட்டலால் மூடப்பட்டன. லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 1000க்கும் அதிகமான பள்ளிகள் உள்ளன. இங்கு 6 லட்சத்து 40 ஆயிரம் மாணவர்கள் படித்து வருகின்றனர். கடந்த 15.12.201 அன்று வழக்கம்போல் மாணவர்கள் பள்ளிக்கு வந்தனர். சிறிது நேரத்தில் வெடிகுண்டு மிரட்டலின் காரணமாக அனைத்து பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு மாணவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர்.

---

பிலிப்பைன்ஸை பயங்கர மெலர் என்ற சூறாவளி தாக்கியது. இந்த சூறாவளியின் காரணமாக ஆழிப் பேரலைகள், வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் உள்ளிட்ட இயற்கை பேரழிவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கை விட்டதைத் தொடர்ந்து 7 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் பத்திரமாக நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

---

அதி விரைவான இணைய பயன்பாடு அனுபவத்தை வழங்க லைஃபை என்ற தொழில் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கண்ணுக்குப் புலப்படும் ஒளிக்கற்றைகளைப் பயன்படுத்தி இணையத்தை பயன்படுத்துவதற்கான ஒரு புதிய தொழில் நுட்பமே லைஃபை என அழைக்கப்படுகிறது. இது வைஃபை தொழில் நுட்பத்தைவிட 100 மடங்கு வேகமாக செயல்படக்கூடியது. வைஃபையில் பயன்படுத்தப்படும் ரேடியோ அலைவரிசையைவிட லைஃபையில் 1000 மடங்கு பெரியதாகும். இந்த இணை வசதியைப் பெறுவதற்கு சாதாரண LED மின் குமிழ், இணைய இணைப்பு மற்றும் போட்டோ டிரக்டர் ஆகியன போதுமானதாகும்.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். சவ்சிங் டாமோர்

## சிமளியா (தேவல் ஃபளியா), குஜராத்



எனது பெயர் சவ்சிங் டாமோர். நான் குஜராத்தில் தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ள சிமளியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்றபாவங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்பவனாகவும் வாழ்ந்து வந்தேன். இதினிமித்தம் எனது வாழ்வில் வியாதி, ஏழ்மை என மிகவும் கஷ்டப்பட்டேன். எனது சகோதரன் வியாதியாயிருந்தார். அவருடைய சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை.

இந்நிலையில் ஷாலோம் விசுவாசி ஒருவர் மூலம் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டோம். பின்பு எங்களை வாங்கோல் ஷாலோம் சபைக்கு அழைத்து சென்றார்கள். அங்கு ஊழியர். கண்ணு பாபோர் அவர்கள் ஜெபித்த போது எனது சகோதரனுக்கு தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் 1998–ல் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக்கொண்டோம். தொடர்ந்து வாங்கோல் ஷாலோம் சபைக்கு சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தோம். பின்பு 1999–ல் ஞானஸ்நானம் பெற்றேன்.

பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் போதகர். கண்ணு பாபோர் அவர்கள் மூலம் தெளிவாக பேசினார். பின்பு ஊழியம் செய்ய என்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து 1 மாத வேதாகம மற்றும் ஊழியப் பயிற்சி பெற்று, தற்போது கர்வானி கிராமத்தில் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். 2 குடும்பம் சேர்ந்து ஆராதிக்க ஆரம்பித்தோம். தற்போது தேவனுடைய கிருபையால் 50 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு இயேசுவை ஆராதித்து வருகிறார்கள். எங்களுக்கு 3 பிள்ளைகள் உண்டு. விரைவில் 100 குடும்பங்களை இயேசுவண்டை கொண்டு வர வேண்டும் என்ற தரிசனத்துடன் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறோம். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **Mr. K. Sundararaj,** Payanam

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 580 க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 660 க்கும் அதிகமான ஸ்தல சபைகளை உருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 250 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2500/– ஜெபித்துக் கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரதமெங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்திப் பணியாளரைத் தாங்குவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

**Wish You A Great, Prosperous,
Blissful, Healthy, Bright, Delightful,
Energetic & Extremely Happy,
HAPPY NEW YEAR**

# HAPPY NEW YEAR - 2016



# புத்தாண்டு வாழ்த்துக்கள் - 2016

## பேராயர். வே. தேவதாஸ் குடும்பம்

**ஷாலோம் போதகர்கள் & பீல் சுதேச ஊழியர்கள்**
**ஷாலோம் பணித்தள & தலைமை அலுவலக ஊழியர்கள்**

Owned and Published by V. Devadass from New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadass